# நாடகத்தின் வித்து தெருக்கூத்து

**திரு ச.செந்தில்நாதன்**

**தமிழ் – உதவிப்பேராசிரியர்**

**கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**

**நஞ்சனாபுரம்,ஈரோடு – 638 107. senthilnathan107@gmail.com**

18

**ஆய்வுச்சுருக்கம்**

பலவகைக் கலைகளின் கூட்டாகச் சேர்ந்த நாடகக்கலையின் அடிப்படை முற்காலத்தில் தோன்றிய தெருக்கூத்து என்பதே. நாடகம் பழந்தமிழர்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்த ஒன்றாகும். நாட்டு + அகம் = நாடகம். நாட்டுமக்களின் அகத்தை அப்படியே எடுத்துரைக்கும் கலையாக அமைந்த இந்த நாடகக்கலையின் வித்து தொல்காப்பியந் தொட்டு சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் விரவிக்கிடக்கின்றன. ஒரு மையக்கருத்தைக் கொண்ட கதையை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளில் ஒன்றான கலவையாகப் படைத்துக்காட்டப்படுவதை நாடகம் எனலாம். இந்நாடகத்தை எழுதுபவர்கள் நாடகாசிரியர்கள் என்றழைக்கப்படுகின்றனர். நாடகாசிரியர்களின் சிறப்பான பணியினால்தான் இன்றைய உலகிற்குக் காணக் கிடைக்காத அரியதாக படைப்பாக நாடகக்லை கிடைத்துள்ளது. முத்தமிழும் கலந்த வெளிப்பாடாக அமைந்த நாடகத்தில், இசையுடன் சொற்களும் கலந்த வடிவமாக உடலசைவுகளும் இணைந்து ஆக்கம் பெற்றுள்ளன. நாடகக்கலையின் வித்து பழமையான நூல்களான தலைச்சங்க காலத்து நூலான அகத்தியம் தொடங்கி இன்றுவரை தோன்றிய பல்வேறு இலக்கியங்களில் எடுத்துரைக்கப்படுகிறது. அன்மைக் காலத்தில் வெளிவந்துள்ள ஆறு.அழகப்பனின் தமிழ்நாடகம் தோற்றமும் - வளர்ச்சியும் என்ற நூலை முதன்மை சான்றாதாரமாகவும் சங்க காலத்து நூல்களைத் துணைமை சான்றாதாரங்களாகவும் எடுத்துக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. முழுமையான ஆய்வுப்பொருளாக “நாடகத்தின் வித்து தெருக்கூத்து” என்ற ஆய்வுக்கருத்தை எடுத்துரைக்க வரலாற்றியல் அணுகுமுறை பார்வையில் சங்க கால இலக்கியங்களுக்குள்ளே ஆய்வெல்லையை வகுத்துக்கொண்டு கட்டுரை நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி.

## 1.1 முன்னுரை :

கலைகளில் சிறப்பிடம் பெறும் கலை நாடகக்கலையாகும். நாடகம் என்பது பலவகைக் கலைகளின் கூட்டாகச் சேர்ந்த சேர்க்கையாகும். நாட்டு + அகம் = நாடகம். நாட்டுமக்களின் அகத்தை அப்படியே எடுத்துரைக்கும் கலையாகும். ஒரு மையக்கருத்தைக் கொண்ட கதையை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளில் ஒன்றான கலவையாகப் படைத்துக்காட்டப்படுவதை நாடகம் எனலாம் இந்நாடகத்தின் வித்து தெருக்கூத்தில் வெளிப்படுகிறது. தெருக்கூத்து பழந்தமிழர்களின் வாழ்வியலோடு கலந்த ஒன்றாகும். இதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழி அறியலாம். சங்க இலக்கியங்களில் தெருக்கூத்து பற்றிய செய்திகளைப் பின்வருமாறு கட்டுரையில் காணலாம். அதன் மூலம் நாடகத்தின் வித்து தெருக்கூத்து என்பது

புலப்படும்.

**1.2 தமிழ்நாடகத்தின் தோற்றம்:**

முத்தமிழும் கலந்த வெளிப்பாடாக அமைவதே நாடகமாகும். இயல் என்பது சொல் வடிவமாகும். இசை என்பது சொற்களோடு இசையும் கலந்த வடிவமாகும். நாடகம் என்பது இயல், இசை மற்றும் உடலசைவுகளை அடிப்படையாகக் கொண்ட வடிவமாகும். உலகமே ஒரு நாடக மேடை என்றார் சேக்ஸ்பியர். உலகில் பல நாடகங்கள் நிகழ்த்தப்படுகின்றன, எழுதப்படுகின்றன.

**1.3 தமிழர் நாடகக்கலையும் தெருக்கூத்தும்:**

தமிழகத்தில் நாடகம் என்பது தெருக்கூத்து மற்றும் பாவை நாடகங்களாகவே நடத்தப்பட்டுள்ளன. தமிழர் நாடகக்கலையின் தோற்றம் பற்றிப் பழமையான நூல்களில் பல்வேறு கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. குறிப்பாகத் தலைச்சங்க காலத்து நூலான அகத்தியத்தில் பாட்டும், உரையும், நடிப்பும் நாடகம் என்று உரைக்கப்படுகிறது. நாடகத்தின் தமிழ் மரபுவழி இலக்கணமாக இதுவே கூறப்படுகிறது. சங்க காலத்தில் தோன்றிய குணநூல், கூத்தநூல், சயந்த நூல், மதிவாணர் நாடகத் தமிழர், முறுவல் போன்ற நாடக நூல்களின் வாயிலாக இன்று நாம் நாடகத்தின் வெளிப்பாட்டினைக் காணமுடிவதைச் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் உரையின் வழி அறியலாம்.

**1.4.0 பழமையான சான்றுகள்:**

நூல்களின் மூலம் தமிழ் நாடக்கலை பற்றிய சான்றுகளை அகத்தியம் தொல்காப்பியம் சிலப்பதிகாரம் உள்ளிட்டப் பல பழமையான நூல்களின் மூலம் தமிழ் நாடக்கலை பற்றிய சான்றுகளை அறிந்து கொள்ளலாம்.

**1.4.1 அகத்தியம்**

கிடைத்துள்ள ஆதாரக்குறிப்புகளான தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் செய்திகளைத் தொடக்க நிலையில் எடுத்துக் கொண்டால் இதற்கு முந்ததைய காலமாக அகத்தியம் தோன்றிய காலத்தையும் குறிப்பிட வேண்டிய நிலையில் உள்ளோம். நாடகத்தமிழ் பற்றிக் கூறும் நூல்களில் பழமையானது அகத்தியமே. அகத்தியரால் செய்யப்பட்ட அகத்தியம் முத்தமிழ் இலக்கணங்களையும் வகுத்துரைப்பது. அகத்தியம் எடுத்துரைக்கும் கூத்துச் செய்திகளை,

> **“அவைதாம்**
> **சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்று**
> **ஆய்ந்துரை வகுத்தனன் அகத்தியன் தானே”**

(அடியார்க்கு நல்லார் உரை)

என்ற அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டும் நூற்பா மேற்கோள்களின் மூலம் அறியமுடிகிறது. கூத்தென்ற பெயராலேயே நாடகம் வழங்கி வந்துள்ளது. கூத்திற்கு முதல் பராமாச்சாரியன் கூத்தரசனாகிய சிவபெருமானே என்று பழைய நூல்கள் கூறுகின்றன. இக்கருத்தையே வடமொழி நாடக ஆசிரியர்களும் எடுத்தாளுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

**1.4.2 தொல்காப்பியம் :**

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் கூறியுள்ள பல செய்திகள் நாடகங்களுக்கு ஏற்றக் கூறுகளாக உள்ளன. மெய்ப்பாடுகளைப் பல வகைகளில் அபிநயங்கள் மூலமாக விரித்து உணர்த்துவனவே

கூத்துக்கள். பொதுவாகத் தொடக்கநிலையிலிருந்து இலக்கியங்களில் நாடகக்கூறுகள் என்றக் கண்ணோட்டத்தில் காணமுயற்சித்தால் முதலில் குறிப்பிடப்படுவது தொல்காப்பிய இலக்கணந்தான்.

**1.4.3 தொல்காப்பியத்தில் நாடகக்கூறுகள் :**

மிகத்தொன்மையான நூல் தொல்காப்பியம். இந்நூலிலேயே 'நாடகம்' என்ற சொல்லாட்சியைக் காணலாம். மேலும் இந்நூலில் கூறப்படும் செய்திகளைக் காணும்போது கூத்து பற்றிய செய்திகள் சில அறியமுடிகின்றது. இவருடைய காலத்தில் நாடகவழக்குண்மையை "நாடக வழக்கினும்…" என்ற நூற்பாவில் காணலாம். தொல்காப்பியர் காலத்தில் கூத்துக்கள் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. 'தெய்வக்கூத்துக்களாக, வெறிக்கூத்து, குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவையும் வேந்துதொடர்புடைய கூத்துக்களாக, வள்ளிக்கூத்து, கழனிலைக்கூத்து, கருங்கூத்து. அமலைக்கூத்து, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை எனவும் கீழ்க்கூத்துக்களாக காடைக்கூத்தும் கழைக்கூத்தும்' கூறப்பட்டுள்ளமை அறியலாம்.

**1.4.4 நாடகக்கலைஞர்கள் பற்றிய செய்திகள் :**

ஆடற்கலையில் வல்லவர்கள் இசையுடன் கூடிய திறன்பெற்ற கலைஞர்களாக வாழ்ந்துள்ளனர் என்றும் அவர்களில் ஒருசாரார் கூத்தர் என்று அழைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் தொல்காப்பியத்தின் வழி அறியலாம்.

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"**

(தொல். பொருள். புறத். 36)

பிற்காலத்தில் ஆற்றுப்படைகள் தோன்றுவதற்கு இந்நூற்பாவே அடிப்படையாக அமைந்துள்ளது. நாடகத்தை 'விளையாட்டு' என்ற பொருள் குறித்த நிலையில் 'பண்ணை' என்ற சொல்லால் தொல்காப்பியர் குறிக்கின்றார்.

**"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்**
**கண்ணிய புறனே நானான் கென்ப"**

(தொல். பொருள். மெய்ப். 1)

பண்ணை என்பது விளையாட்டாகவும் விளையாட்டாக உள்ளத்துக்கு உவகையூட்டுதலால் நாடகம் 'பண்ணை' எனப்பட்டது.

**1.5.0 சங்க காலத்தில் நாடகக் கூறுகள் :**

கி.பி. 250 வரை உள்ள காலத்தைச் சங்ககாலம் என்பர். தொன்மையான காலத்தில் அதாவது தொல்காப்பியர் காலத்திற்கும் முற்பட்டக் காலத்தில் பலவகை கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதை அடித்தளமாகக் கொண்டால் அதன் தொடர்ச்சியன சங்க காலத்தில் அதன் வகைகளைக் கண்டறியலாம். இசைக்கலையை வளர்த்த பாணரும் பாடினியரைப்போல கூத்தர்கள் கோடியர் எனவும் கண்ணுளர் எனவும் வயிரியர் எனவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

'உலகம் ஒரு நாடக மேடை' என ஆங்கிலநாட்டுப் பெருங்கவிஞர் சேஷக்ஸ்பியர்

கூறியிருப்பதைப் பல அறிஞர்கள் பாராட்டுகின்றனர். ஆனால் இவருக்கு முன்னரே ஒரு தமிழ்ப்புலவர் இதே கருத்தைக் கூறியிருக்கிறார் என்பதை அறியும்போது மிகுந்த வியப்பு மேலிடுகின்றதைக் காணலாம். உறையூர் முது கண்ணன் சாத்தனார் என்னும் புலவர் சோழன் நலங்கிள்ளியை நோக்கி,

**“ ……………………………………………விழவிற்**
**கோடியர் நீர்மை போல முறைமுறை**
**ஆடுநர் கழியும் இவ்வுலகத்து”**

(புறம். 29)

என்று பாடுகின்றார். ‘விழவின்கண் ஆடும் கூத்தரது வேறுபட்ட கோலம்போல அடைவடைவே தோன்றி இயங்கி இறந்து போகின்ற இவ்வுலகம்’ என்பதே இதன் கருத்தாகும். இயற்கைக் காட்சிகளிடையே நடந்த நாடகக்காட்சியினை அகநானூற்றில் கபிலர்,

**“கழைவளர் அடுக்கத்து இயலி யாடுமயில்**
**விழவுக்கள விறலியிற் றோன்றுநாடன்”**

(அகம். 82)

என தாம் கண்ட நாட்டியக் காட்சியை இயற்கைப் பொருள்களிலும் வைத்துக் காணப்பெற்ற முயற்சியைப் பார்க்கும்போது அக்காலத்தில் கலை ஏற்றம் பெற்றிருந்த திறத்தினை உணரமுடிகிறது. கழைக்கூத்து பற்றிய செய்தி குறுந்தொகையில்,

**“……………………………………………ஆரியர்**
**கயிறாடு பறையிற் காட்லபொரக் கலங்கி**
**வாகை வெண்ணெற் றொலிக்கும”**

(குறுந். 7)

வெளிப்படுகிறது. அல்லியம் என்பது கூத்தாகவும் அது பாவைக் கூத்து வகையைச் சார்ந்ததாகவும்

**“வல்லோன் தைஇய வரிவனப் புற்ற**
**அல்லிப் பாவை ஆடுவனப் பேய்ப்ப”**

(புறம். 33)

அல்லிப்பாவை ஆடுவனப்பு என்றும் ஆண்கோலமும் பெண்கோலமும் அவ்விருவரும் ஆடுங்கூத்தை என உரையெழுதியுள்ள உரைகாரார் மூலம் புறநானூற்றில் இக்கூறு இடம்பெற்றுள்ளமையைக் காணலாம்.

தொடக்க நிலையில் ஆடப்பட்டப் கூத்துக்கள் குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை உள்ளிட்ட குரவைக்கூத்துக்களைக் கூறலாம். போர்க்களத்தில் வெற்றி வாகை சூடிய வீரர்களின் வெற்றிவிழாவினைக் கொண்டாடும்போது இன்னிசைப் பாணரும் கூத்தரும் தமது ஆடல் பாடல்களால் இன்னிசைக் கருவிகளால் வீரர்களை மகிழ்விக்க ஆடும் கூத்தாகும். அரசனும் வெற்றிக்களிப்பில் தன்னைமறந்து வீரர்களுடன் குரவைக் கூத்தாடுகின்றான்.

**“விழவுவீற் றிருந்த வியலுள் ஆங்கண்**
**கோடியர் முடிவின் முன்னர் ஆடல்**
**வல்லான் அல்லான் வாழ்கஅவன் கண்ணி**
**வீந்துகு போர்க்களத்து ஆடுங் கோவே”**

(பதிற். 56)

இக்காட்சி பதிற்றுப்பத்தில் வெளிப்படுகிறது. வெற்றியைக் கொண்டாடும் மகிழ்வில் மன்னனும் தன்னைமறந்து மகிழ்ந்தாடும் இக்கூத்தே இந்தக் களிப்பினால் நாளடைவில் குரவைக்கூத்தாக வளர்ந்திருக்கலாம். இதன் வளர்ச்சியாகக் கடவுளுக்குக் குரவையாடி பரவிய நிகழ்ச்சியை,

**“ பெருமலை**
**வாங்கமைப் பழுநிய நலவுண்டு**
**வேங்கை முன்றிற் குரவையுங் கண்டு”**

(நற்றிணை)

என்ற நற்றிணைப் பாடலின் வழி அறியலாம். குரவைக்கூத்தைத் ‘தழுவணி’ என்ற சொல்லால் குறுந்தொகை குறிப்பிடுவதை,

**“தொடலை ஆயமொடு தழுவணி அயர்ந்தும்”**

(குறுந்தொகை)

பாடல் தெளிவுறுத்துகிறது. பிரிந்த காதலர்கள் மீண்டும் சேர்வதற்காகத் தோழியர்கள் ஒன்று கூடி வரையுறை தெய்வத்தை வேண்டிக் குரவையாடிய செய்தி கலித்தொகையில்,

**“வரையுறை தெய்வம் உவப்ப உவந்து**
**குரவை தழீஇயாம் ஆட”**

(கலி. 39)

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன. இவை பின்வந்த சிலப்பதிகாரக் கருத்துக்களோடு ஒப்புநோக்கக் காணத்தக்கதாகும். அதாவது,

**“ஆடுங் கூத்தர்போல ஆருயிர் ஒருவழி**
**கூடிய கோலத்து ஒருங்குநின் றியலாது”**

(சிலம்பு. 28: 165-166)

காலமாற்றத்தால் ஒருவர் பல லேடங்களைப் புனைந்து வந்து மாறிமாறி ஆடும்நிலைக்கு மாறியுள்ள நிலையை சிலப்பதிகாரம் வழி அறிய முடிகிறது. தொல்காப்பியர் கூறும் ஒள்வாள் அமலைக்கூத்தினை அகநானூற்றில் காணமுடிகிறது. போர்க்களத்தில் பகைமன்னன் முன் ஆடும் கூத்தான ‘அமலை’யை ஆடிய செய்தியை,

**“கூட்டெதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி**
**புள்ளிற் கேம மாகிய பெரும்பெயர்**
**வெள்ளத் தானை அதிகற் கொன்றுவந்து**
**ஒள்வாள் அமலை ஆடிய ஞாட்பின்”**

(அகம். 142)

என்ற பாடல்வழி அறியலாம். இசைப்பாடல்கள் நிறைந்து மணங்கமழச் சிறப்பினைப் பெற்றிருக்கும் நூல் பரிபாடலாகும். அதேபோல நாடகத்திற்குக் கலித்தொகைக்குரிய யாப்பையும் கருதுவர். நாடகக் கூறுகளில் அரங்குகள் பற்றிய செய்திகளும் பெரிதும் இடம்பெற்றுள்ளன. திருப்பரங்குன்றத்தில் பாணரும் கூத்தரும் விழாவில் கொண்டாடி ஆடல் பாடல் நிகழ்த்திய செய்திக்ள பரிபாடலில்

கூறப்படுகின்றன. ஆவற்றில் ஆடல் அரங்குகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம்.

**“படுகண் இமிழ்கொளை பயின்றனர் ஆடும்**

**குளிநாள் அரங்கின் அணிநயம் புரையும்”**

(பரி. 16: 12-13)

கூத்தர்கள் கூத்தாடுவதற்கெனத் தனிப்பட்ட “ஆடுகளங்கள்” இருந்தன என்பதை,

**“கூத்தர் ஆடுகளங் கடுக்கும் அகநாட்டையே”**

(புறம். 28)

என்ற புறநானூற்றுப் பாடலடி விளக்குகிறது. ‘கருங்கூத்து’ என்ற ஒரு கூத்து பற்றி,

**“முதுபார்ப்பான் வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து”**

(கலி. 65)

என்ற கலிப்பாவின் மூலம் அறியமுடிகிறது. உரையாசிரியர்களின் கூற்றுக்கள் வழி இழிமக்கள் கைப்பட்டும் கூத்துக்கள் இருந்துள்ளன என்ற செய்தியையும்

**“எழுவகைக் கூத்தும் இழிகுலத்தோரை ஆட**

**வகுத்தனன் அகத்தியன் றானே”**

என்ற அடிகளின் மூலம் அறியலாம்.

**1.5.1 பத்துப்பாட்டில் நாடகக்கூறுகள் :**

கூத்தராற்றுப்படையும் பொருநாராற்றுப்படையும் நாடகத்தின் அடிப்படையான கூத்து பற்றிய செய்திகளைப் பகிரும் இலக்கியங்களாகத் திகழ்வதைக் காணலாம். கலையை வளர்க்கும் தனிப்பெரும் கூட்டத்தினைப் பெற்றிருக்கும் நம் தமிழ்ச்சமூகம் இக்கலையை வளர்த்தெடுக்க முன்னெடுத்துள்ள முயற்சியைக் காணமுடிகிறது. இக்கூட்டத்தின் பெருமையைச் சுட்டும் வகையில் கூத்தருக்கும் பொருநருக்கும் தனித்த முறையில் நூல்கள் எழுதப்பட்டுள்ளமையைக் காண்கிறோம்.

பத்துப்பாட்டில் கூத்தராற்றுப்படை என்ற மலைபடுகடாம் நூலை இதற்குச் சான்றாகப் பகரலாம். பல்வேறு இசைக்கருவிகளுடன் கூத்தர்கள் தன் இனக்குழுவினருடன் பைகளில் கட்டிக் கொத்துக் கொத்தாக மூங்கில் கால்களில் மாட்டித் தூக்கிச் செல்வரெனவும் அத்தோற்றம் ஒரே கிளையில் கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்கும் பலாக்காய்களை நினைவூட்டுகின்றன என்பதை இந்நூலாசிரியர் கூறுவதை உணரலாம்.

**“நொடிதரு பாணிய பதலையும் பிறவும்**
**கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப**

**நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்”**

(மலைபடு. 11-13)

இவ்வடிகளோடு,

**“பண்ணமை முழவும் பதலையும் பிறவும்**
**கண்ணுறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்**

**குாவிற் றகைத்தத் துறைகூடு கலப்பையர்”**

(பதிற். 41: 3-5)

இவ்விரு இலக்கிய அடிகளையும் ஒப்பிட்டு அறிய சிறப்பு பெறுவதை அறியமுடிகிறது. தொல்காப்பியர்; “வாடா வள்ளி” என்று குறிப்பிடுகிறார். பல சிறியசிறிய ஊர்களில் நடத்தப்பட்டு வந்துள்ளன என பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது.

**“வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்**
**நாடுபல கழிந்த பின்றை”**

(பெரும்பாண். 370-371)

நாடகம் ஆடும் மகளிரை “நாடக மகளிர்” என்றும் அவர்கள் கூத்தாடும் இடத்தை “ஆடுகளம்” என்றும் குறிப்பிடுவதைப் பெரும்பாணாற்றுப்படை பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.

**“நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த**
**விசிவீங் கின்னியம் கடுப்ப”**

(பெரும்பாண். 55-56)

அக்கால மக்களால் நாடகங்கள் பெரிதும் விரும்பிப் பார்க்கப்பட்டன என்றக் குறிப்பு,

**“பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்”**

(பட்டின. 113)

பாடலடியினால் பெறப்படுகிறது. மலையும் மலைசார்ந்த இடத்தில் வாழும் மலைவாணர்களின் கூத்துக்களைத் திருமுருகாற்றுப்படை வெளிப்படுத்துகிறது. கள்ளுண்டு மகிழ்ந்த குறவர்கள் தம்குழுவுடன் குரவையாடுகின்றனர். குறவர் கூத்து மிகப்பழமையான தொல்குடி மக்கள் ஆடிவந்தக் கூத்தாக இருக்கலாம் என்பதை திருமுருகாற்றுப்படை பாடலடிகள்,

**“நீடமை விளைந்த தேக்கட் டேறல்**
**குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து**
**தொண்டகச் சிறுபறைக் குரவை யயர”**

(திருமுருகாற்றுப்படை)

எடுத்துரைக்கிறது.

### 1.6 முடிவுரை :

நாடகத்தின் வித்து தெருக்கூத்து என்ற தேடலுக்கு அகத்தியம், தொல்காப்பியம், உரையாசிரியர்களின் உரைக்குறிப்புகள், சங்கஇலக்கியங்கள் மற்றும் சிலப்பதிகாரம் உள்ளிட்ட இலக்கண இலக்கியங்களில் கூத்துபற்றிய செய்திகளும் அவற்றின் சான்றாதாரங்களும் காணக்கிடைக்கின்றன.

**துணை நூற்பட்டியல் :**

1. தமிழ் நாடகம் தோற்றமும் - வளர்ச்சியும், ஆறு.அழகப்பன். பாரிநிலையம், சென்னை – 600 108, மறுபதிப்பு 2020.
2. சிலப்பதிகாரம், ஸ்ரீதியாகராச வெளியீடு, சென்னை 1955.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல்.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல்.

5. புறநானூறு, ஔவை சு.துரைசாமிப்பிள்ளை(உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்ப, 2007.
6. அகநானூறு – களிற்றியானை நிரை, ந.மு.வேங்கடசாமி நாட்டார் – ரா.வேங்கடாசலம்பிள்ளை(உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்பு 2009.
7. குறுந்தொகை, பொ.வே.சோமசுந்தரனார்(உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்ப, 2007.
8. பதிற்றுப்பத்து, ஔவை சு.துரைசாமிப்பிள்ளை(உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்ப, 2007.
9. நற்றிணை, அ.நாராயணசாமி ஐயர்(உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்ப, 2007.
10. கலித்தொகை, நச்சினார்க்கினியர்(உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்ப, 2007.
11. பரிபாடல், பொ.வே.சோமசுந்தரனார்(உரை), சைவ சித்தாந்தநூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்ப, 2007.
12. பத்துப்பாட்டு மூலமும் உரையும், பொ.வே.சோமசுந்தரனார் (உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்பு, 2008.